III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 26-02-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : பிலால் அகமது | Village | : |
| Father's / Husband's Name | : இக்பால் | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :- இல்லை**

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்திருக்கின்ற நிரூபண வாக்குமூலத்தில் இருக்கின்ற சங்கதிகள் எனக்கு தெரியும். பிரதிவாதி ஜான்வெஸ்லி நான் பள்ளியில் படிக்கும் காலத்தில் அந்த பள்ளியின் வாட்ச்மேனாக பணிபுரிந்தார். அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். நான் பாடியிலுள்ள சேக்ரட் ஹார்ட் பள்ளியில் 8 ஆம் வகுப்பு வரை படித்தேன். முதல் பிரதிவாதி கிரிஸ்டிபெல்லை எனக்கு தெரியும். முதல்பிரதிவாதியை எனக்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். 1, 2 பிரதிவாதிகள் எனக்கு பொது அதிகாரம் கொடுக்கும்பொழுது எனக்கு 27 வயதிருக்கும். 29.12.2010 ல் எனக்கு பொது அதிகாரம் கொடுக்கப்பட்டது. நான் 2008 ல் ஜான்வெஸ்லியை தற்செயலாக சந்திக்கும்பொழுது அவரது குடும்ப கஸ்டம், கடன்சுமை ஆகிய காரணங்களுக்காக அவரது சொத்தை விற்கவேண்டும் என்று கூறினார். இதனால் அவர் எனக்கு பொது அதிகாரம் கொடுத்தார். 2008 ல் கடன் இருப்பதாக சொல்லி 2010 ல் எனக்கு பொது அதிகாரம் கொடுத்தார். இந்த 2 ஆண்டுகளில் அவரது நிலத்திற்கு உள்ள அசல் ஆவணங்கள் எதுவும் இல்லாததால் அதனை பெற ஏற்பாடு செய்தேன். 2010 ல் பொது அதிகாரம் கொடுப்பதற்கு முன்பாக எனக்கும் ஜான்வெஸ்லிக்கும் இடையே ஒப்பந்தம் எதுவும் ஏற்பட்டதா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுகின்ற விற்பனை ஒப்பந்த

உடன் படிக்கை மற்றும் உறுதி மொழிப் பத்திரத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த பத்திரம் **பி.த.சா.ஆ.3.**

(அறிவார்ந்த 1ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).